உ

கடவுள் துணை.

கொசுப்பதம்.

செற்குத்துப்பதம், மூக்குத்தூள் புகழ்
பதம், ஷெ இகழ்பதம், காவேரி
யம்மன் கும்மிப் பாடல்,
அடங்கியிருக்கின்றன.

சென்னை-சூளை.
சங்கநிதிவிளக்க அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
1923.

73

உ

கடவுள் துணை.

கொசுப்பதம்.

பல்லவி.

துள்ளத்துள்ளத்துள்ளக்கடியாதே சொன்னேன்
சொட்டத்தலைக்கொசுவே

அநுபல்லவி.

கள்ளப்பயலுக்குப் பிறந்தகொசுவே
காதுக்குள்ளேவந்து கயகயவென்கிறுப்
கொள்ளிக்கட்டைக்கொண்டு சுட்டுப்பொசிக்கிறேன்
கும்பிடுபோட்டுக்கொண டோடிப்பிழைத்துப்போ

சரணங்கள்.

1. ஆட்டுத்தொழுங்களு மாட்டுத்தொழுங்களநே
கழுமுண்டங்கே நீவோடுநல்ல ஆக்கமில்லாமனைதோறும்
பெருஞ்சல தாரைக்குள்ளேயுங்கள்காடு ஒட்டைப்பழ
யமாடம் பாழுங்கிணறுகள் உங்கள்மனையரை வீடுநல்ல
ஆற்றங்கரைகளும் ஊற்றங்கரைகளு முண்டங்கேபோ
ய்விளையாடு வாட்டமில்லாமல் சுகரீரமுள்ள மன்ன
ருடம்பெல்லாஞ் சொன்னீரொழுகவே கூட்டங்கூட்ட
ங்கூடிகடிக்கிறீருங்கள் கொட்டென்றபுத்தியை விட்டு
விட்டச்சொன்னேன். . துள்

2. திங்கள்செவ்வாய் புதன்வந்து சடித்தாலுஞ் சிரசுகாக்கினைவருமே நம்மைத்தேடி குருவென்னும் வியாழத்திற்கடித்தால் சியென்றால் போளாயுன்பெரு மைசங்கையுடன்வெள்ளி சனியாற்கடித்தால் தப்பிப் பிழைப்பதுஅருமை நம்மைத்தானுகிவாரத்தில்வந்து கடித்தாலுன் சடலம்பிழைப்பதுஞ் சிறுமைநீ அஞ்சஞ் சிறுத்துக் குதும்பியெடுத்து ஆருக்குமாகாத லோபிக் கொசுவே கங்கணங்கட்டிக்கடிக்கிறாய் நீயென்னைக்கை யாற்பிசைந்து கசக்கியெறிகுவேனே. தள்

3. உத்தரவில்லாமல் சென்னைபுரிதனி லூருக்கு ள்ளேவரலாமோ உங்கள்ஒளிவு தெரியாமற்பட்டப்பு கல்மட்டும் ஒளித்திருக்கவுமாமோ அத்திரவாளவிழி யார்க்கு மெமக்குமெல்லமளி பொறுக்கவும்போமே இழிவானயிசையுங் குணமுமெப்போதும் ஏற்றுக்கொ ண்டரின்பமாமோ சித்தங்களித்திடச்சொல்லும் முனி சாமிசெய்யும்பதந்தனை மெய்யாகவேகேட்டு நத்திவந் தகொசு அத்தனையும்போக நானையிர்தவழிவாராம லோடிப்போ. தள்

கொசுப்பதம்.

முற்றிற்று.

நெற்குத்துப்பதம்.

பல்லவி.

வலியநெல்லுகுத்த என்னாலேயாகாது
மன்னாப்புத்தாருஞ் சுவாமி

அநுபல்லவி.

கலைசேருமுத்துக்குமார நாதர்முனிவர்மெச்சும்
காமராமஅவதாரசாமிநாதா தீரா

சரணங்கள்.

1. ஈரக்கால்நெல்லுவாங்கி யூரவைத்தானது ஏற
க்குறையபழுளையுருகுமே அதைவாரி வேகவைத்தால்
பார்க்கதிக்கில்லாமல், மணிமணியாய்த் தீய்ந்துகருகு
மே வீட்டோரமெங்குமதை புலரவைத்தால்மழை ஒ
ழுக்கில்நனைந்து தண்ணீர்பெருகுமே ஒருசேர்நெல்கு
றைந்தாலென் வாரமுமாடும்போய்த் தெருவில்நிற்கத்
தெண்டம்வருகுமே. வலிய

2. கூட்டங்கூட்டமாகத் தாயுங்கோழியுங்குஞ்சு
நின்றுகொட்டிக்கொள்ளுமே அதைஓட்டப்போன பி
ள்ளைகொழிக்கவேணுமென்று ஒவ்வொருபிடியாக அ
ள்ளுமே சொந்தகாட்டுப்பெண்ணனவள் திருட்டுவாய்
த்ததென்று நாழியால்மரக்காலால் மெள்ளுமே வந்த
மாட்டுக்காரப் பையலவனுக்கையா வென்னைவட்டு
வெனக்கிள்ளுமே. வலிய

3. முழுதிலுங்காய்ந்தநெல் பதம்பார்க்கத்தெரி
யாமல்முருகி முடுகிமெத்தப்பொடியுமே வாரிக்குத்த

வேணுமென்று உலக்கைகாட்டுமுன்னே குருணிக்கரை
நாழியாயிடுமே அதைமெத்தெனப் புடைத்தாலும் அ
ரிசியென்பதல்லால் வீட்டெங்கும்வெகு நொய்யாயிடியு
மே கல்விகற்றசாமிநாதர முனிவரயெந்தன் கடுக்கன்
மேல்பொழுதுகள்விடியுமே. வலிய

நெற்குத்துபதம்-முற்றிற்று.

மூக்குத்தூள் புகழ்பதம்.

பல்லவி.

என்னயோசனைபார் இந்தத்தூள்
என்னயோசனைபார்

அநுபல்லவி.

மன்னர்புகழ்திரு வல்லிக்கேணிதனிற்
கன்னன்மெமாதழிர் நடக்கும்வீதியில்
உன்னிதமாய்சாமிநாயகன் திண்ணைமேல்
மன்னியமாயாண்டி யப்பன்விற்குந்தூள் என்

சரணங்கள்.

1. திட்டமதாகவே புட்டியில்ரொப்பியே
துட்டுக்குத்துட்டெடை விற்கும்பொடியது
சட்டமதாகவே சிட்டிகைகொண்டால்
அட்டகணக்கெல்லா மப்போதேதோற்றிடும் என்
2. பாரிலுபுர்கின்ற பார்ப்பார்கண்மெத்தவும்
பட்சமதாகவே நித்யநித்யங்கொள்ளும்

ஊரிலும்பேர்பெற்ற பந்தர்ப்பொடியது
உண்மையாகத்தூக்க மேர்டிப்போகுந்தானே என்
3. மூக்குத்தூள்கொண்டு சபையினிலுட்கார்ந்தால்
முன்னும்பின்னுமறி யாதவரைக்கூட
பாக்குவெற்றிலையா லாகாததறிமுகம்
பந்தர்பொடியது செய்யுஞ்சிநேகிதம் என்

மூக்குத்தூள்புகழ்பதம்-முற்றிற்று.

மூக்குத்தூள் இகழ்பதம்.

பல்லவி.

என்னகெடுதலைப்பார் பொடியினால்
என்னகெடுதலைப்பார்

அநுபல்லவி.

தன்னாலேசொல்லத் தலைவலிகண்டிடும்
தருணத்தில்மூக்குப்பொடி யில்லாதேவிட்டால்
எண்ணாதுமெண்ணிடு மெங்குமில்லாவிட்டால
ஏக்கத்துநெஞ்சுபோ லேங்கித்திரியுதே என்

சரணங்கள்.

1. மூக்கையடைத்திடும் முன்கோபம்வந்திடும்
மூளைவரண்டிடும் பீனிசங்கண்டிடும்
கேட்காதபேரெல்லாங் கேட்டுவாங்கச்சொல்லும்
கெட்டபாழும்பொடி தொட்டஅபேட்சையால் என்

2. பத்திபில்லாயலே போட்டபழக்கத்தால்
பெரியோர்கையினிற் பொடிவாங்கச்சொல்லுமே
மற்றுமொருவரை நத்திக்கேட்போமானால்
வழக்கமில்லையென்றால் மனதுபுண்ணாகுமே என்
3 மண்டலந்தன்னிற் புகழ்கின்றபேரெல்லா
மாதவத்தோர்முனி சாமியின்சொற்படி
உண்டிநதவியாதிகள் உள்ளதுசொன்னேன்
உண்மையாகக்கேளு நன்மைசெகத்தோரே என்

மூக்குத்தூள் இகழ்பதம்-முற்றிற்று.

காவேரியம்மன் கும்மிப்பாடல்.

ஜெயப்பருவந்தன்னில் வந்துஅம்மன் தானே உற்பத்தியானவளாம் நெல்லிமரத்தின்கீழ் மகாவிஷ்ணுபிர்ந்தாகுந்தற்தனின்றவளாம். க

பிர்மதேவருடன் கன்னிகையாம்அம்மன் பிர்மாதிகம்சர் தீர்த்தவளாம் அறுபத்தாயிரங்கோடி தீர்த்தோடம்மன் அடர்ந்துவார்த்தை பாருங்கடிஅம்மன் தொடர்ந்துவார்த்தை பாருங்கடி. உ

பழனிதனிலே வந்திருந்துஅம்மன் பழனிநதியில் ஸ்நானஞ்செய்து பழனிமுருகனைக் கண்டுதெரிசித்துப்பக்தியுடன்வாராள்பாருங்கடி அம்மன்சித்தியுடன்வாராள் பாருங்கடி. ஈ

மதுரைதன்னிலே வந்திறங்கிஅம்மன் மலர்தாமரையில்ஸ் நானஞ்செய்து மாயசொக்கேசரைக் கண்டு

தெரிசித்து மகிழ்ந்துவார்த்தை பாருங்கடி அம்மன்
புகழ்ந்துவாரதைப் பாருங்கடி. ௪

கும்பகோணத்திலே வந்திறங்கி அம்மன் கொடிய
பாவ நிவர்த்திபண்ணி கும்பகேஜந்திரனைக் கண்டுதெ
ரிசித்துக் கொத்தளித்துவாருள் பாருங்கடி அம்மன்
தத்தளித்துவாருள் பாருங்கடி. ௫

மாயூரந்தன்னில் வந்திரங்கிஅம்மன் மகேஸ்வர
ரைப் பூசைபண்ணி மாயலிங்கேசரை கண்டுதெரிசித்து
மாட்சியுடன்வாருள் பாருங்கடி அம்மன்ஆச்சியிதோ
வாருள்பாருங்கடி. ௬

பஞ்சவனந்தனில்வந்திரங்கிஅம்மன் பாவங்களெ
ல்லாநிவர்த்திசெய்து பஞ்சகஜேந்திரனைக்கண்டு தெரி
சித்துப் பாவையிதோவாருள் பாருங்கடி அம்மன்பூ
வையிதோவாருள் பாருங்கடி. ௭

சிதம்பரந்தனில் வந்திரங்கி அம்மன் சிவகங்கையி
லே ஸ்நானம்பண்ணி சபாநாதரைக்கண்டு தெரிசித்து
ச்சட்டமுடன்வாருள்பாருங்கடி அம்மன் திட்டமுடன்
வாருள் பாருங்கடி. ௮

காஞ்சிபுரந்தனில் வந்திரங்கிஅம்மன் கம்மாநதி
யில் ஸ்நானஞ்செய்து ஏகாம்பரநாதரைக் கண்டுதெரி
சித்து இப்பொழுதேவாருள் பாருங்கடி அம்மன்மெ
ய்ப்புடனேவாருள் பாருங்கடி. ௯

காவேரியம்மன் கும்மிப்பாடல்-முற்றிற்று.